விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 23 திங்கட்கிழமை (09.10.2006) தொலைபேசி. 222 3378, 222 7644 ஒலி 285

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## தமிழீழ விடுதலைப் புலிகள்

# ஆயுதத்தை ஒப்படைத்தாலே ஏ-9 பாதை திறக்கப்படும்

### நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அர்ப்பணிப்புடனும் உண்மையுடனும் ஈடுபட்டால் மட்டுமே ஏ-9பாதை திறக்க முடியுமென்று நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் டபிள்யூ.பி. எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.** (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தாக்குதல் ஐந்து படையினர் பலி

முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் ஐந்து படையினர் பலியானதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக விடுதலைப்புலிகள் முகமாலை முன்னரங்கப் பகுதிகளை நோக்கி மோட்டார் தாக்குதல் நடத்தி வருவதாகவும் நேற்று அவர்கள் நடத்திய தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்தும் நான்கு படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை படையினரும் பதில் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

## நோர்வேத் தூதுவர் நாளை கிளி.செல்வார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்சன் பிறட்ஸ்கர் நாளை செவ்வாய்க் கிழமை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒக்டோபர் 28 முதல் 30 வரையில் பேச்சுக்களை நடத்துவதற்கான இடம் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஹான்சன் பிறட்ஸ்கர் இச் சந்திப்பில் விவாதிக்கக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸ்லாந்தில் பேச்சுக்களை நடத்தலாம் என்று அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும், ஹான்சன் பிறட்ஸ்கர் கேட்டறிவார். (ந-5)

## முகமாலை மீதான தாக்குதலை விடுதலைப்புலிகள் நிறுத்தினால் ஏ-9 பாதை திறப்பது பற்றி பரிசீலனை

### இப்படிக்கூறுகிறார் அமைச்சர் ரம்புக்வெல

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதா னப் பேச்சுவார்த்தை நடைபெற்றாலும் முகமாலை பாதுகாப்பு முன்னரங்க நிலைகள் மீதான விடுத்லைப்புலிகளின் தாக்குதல்கள் நீடிக்கும் வரை ஏ-9 பாதை திறப்பது தொடர் பில் எந்தவித முடிபுகளும் எடுக்கமுடியாது. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முக மாலை முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் மீதான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் எந்த நிபந்தனையும் இன்றி ஒரு தலைப்பட்சமாக நிறுத்தி அங்கு சுமூக நிலை ஏற்படு வதற்கு உறுதியளித்தால் மட்டுமே ஏ-9 பாதையைத் திறப்பது தொடர்பில் பரிசீலிக்க முடியுமெனவும் அவர் மேலும் கூறினார். (ந-5,10)

## திருநெல்வேலியில் தாக்குதல் இராணுவச் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேயில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் இத் தாக்குதல் இடம் பெற்றதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவ வீரர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கல்வியங்காட்டுப் பிரதேசத்திலிருந்து இராணு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு உரிய தினத்தில் நடக்குமா என்பதில் நிச்சயமில்லை

# புலிகளின் பதிலுக்காக அரசு காத்திருக்கின்றது



### சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கருத்து

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து உத்தியோகபூர்வமான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

பேச்சுவார்த்தைக்கான இடம் குறித்தும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் பதிலிலேயே அனைத்து விடயங்களும் தங்கியுள்ளன.

இவ்வாறு அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்தார். சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் விடுதலைப்புலிகளின் பதிலை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. பேச்சுக்களை நடத்த அரசு தயாராகவேயுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையினை எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடத்துவதற்கு அரசாங்கம் தயாரென நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஹான்ஸன் பௌயரிடம் கடந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் தாக்குதல் நடத்த இராணுவம் தயாராகிறது

## கண்காணிப்புக்குழுவிற்கு தமிழ்ச்செல்வன் அறிவிப்பு



(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் இராணுவம் பாரிய வலிந்ததாக்குதலுக்கு தயாராகுவது குறித்து கண்காணிப்புக் குழுவினர் நிலைமைகளைப்பார்வையிட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அவசர கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் வலிந்த தாக்குதல் நடவடிக்கை தொடர்பாக தமிழ் நெற் இணையத்தளத்திற்கு சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த நேர்காணல் வருமாறு;

இராணுவத்தினர் யாழில் வலிந்த தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டு வருகின்றனர். ஆகையால் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முகமாலை முன்னரங்கப் பகுதிகளைப் பார்வையிட வேண்டும்.

ஆனால் முகமாலையைப் பார்வையிடுவதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளமை கவலைக்குரியது. இணைத் தலைமை நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது போர் நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளனர்.

இராணுவத்தின் வலிந்த தாக்குதல் போராக வெடித்தால் எம்மீது குற்றஞ்சாட்டக் கூடாது.

எமது நிர்வாகப் பிரதேசத்தின் மீது முழு அளவிலான தாக்குதலுக்கு இராணுவம் தயாராகிவருவதாக புலனாய்வுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏ-9பாதையைத் திறக்க வேண்டியது அவசியமானது என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். வடபோர் முனை முன்னரங்க நிலைகளைப்பார்வையிட்ட கண்காணிப்புக்குழுவினருக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய நாம் உத்தரவாதம் அளிக்கின்றோம் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ந-5)

## 5 'ஏ' கிளை மாற்ற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணைப் பகுதியில் இயயங்கி வரும் யாழ்.பலநோக் குக் கூட்டுறவுச் சங்கத்தின் 5ஏ கிளை நிறுத்தப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிளை 5ஏயில் பொருள்களை பெற்றவர்கள் கிளை 5 அல்லது 5பியில் தமக்கான பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-5)

# யாழில் தாக்குதல் நடத்தும் எண்ணம் எமக்கு இல்லை

## இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க

யாழ்.குடாநாட்டில் வலிந்து தாக்குதல்களை நடத்துவதற்கான எத்தகைய திட்டமும் எம்மிடம் இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் படையினருக்கு எதிராக மேற்கொள்ளும் தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல் மட்டுமே தற்போதைக்கு மேற்கொள்ளப்படும். இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இலங்கை அரச படைகள் யாழ்ப்பாணத்தில் பெரும் படை நகர்வொன்றுக்குத் தயாராகிவருவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டிய அதே வேளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடமும் முறையிட்டிருந்தார். இது குறித்துக் கருத்துக் கூறுகையிலேயே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் இராணுவம் பாரிய படை நகர்வொன்றுக்கு தயாராகுவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ள கருத்து முற்றிலும் பொய்யானதாகும்.

அவ்வாறானதொரு நடவடிக்கையில் நாம் ஈடுபடவில்லை. யாழ். குடாநாட்டில் வலிந்து தாக்குதல் எதனையும் மேற்கொள்ளும் உத்தேசம் எமக்கில்லை. எம்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் நாம்பதிலடி கொடுப்போம்.



மக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தி சுமுகமான சிவில் வாழ்க்கைக்கு உதவுவதே எமது பணியாகும் என்றும் அவர் கூறினார். (ந)

## குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 55(1)ன் கீழ் நீதிமன்றினால் விடுவிக்கப்படும் அழைப்பாணை

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ.இல.மணநீக்கம்/721

தவராசா கஜேந்திரன் பெண்ணும்
பொன்னம்பலம் கந்தசாமி மகளுமான
சுதர்சினி,
கந்தசாமி கோவிலடி, பொலிகண்டி.
தற்போது: மே/பா.செ.து.தெட்சணாமூர்த்தி
238, அரசடி றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். -வழக்காளி

எதிர்

தவராசா கஜேந்திரன்
Slagteriarbejder, dron. Margrethesvej,
22E.St.-2,4100
Ringested, Denmark. -எதிராளி

மேற்குறித்த எதிராளிக்கு

இந் நீதிமன்றில் உமக்கு எதிராக மேலே பெயர் குறித்த வழக்காளி இவ் வழக்கில் இணைக்கப்பட்டுள்ள துரட்சியில் விண்ணப்பித்துள்ளவாறு விவாகரத்துக்கான நிவாரணங்களைக் கோரி வழக்குத் தொடுத்துள்ளாராகையால் அதற்கு உமது மறுமொழி ஏதும் இருப்பின் அதனை இந் நீதிமன்றில் 2006ம் ஆண்டு 10ம் மாதம் 25 ந் திகதி காலை 9.30 மணியளவில் அல்லது அதற்கு முன்பதாக சமர்ப்பிக்கும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதுடன் குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி சமர்ப்பிக்கத் தவறினால் இவ்வழக்கானது மறுகட்சிக்காரர்இன்றி ஒரு முகமாக விளங்கித் தீர்மானிக்கப்படும் என்றும் இத்தால் உமக்கு மேலும் அறிவித்தல் தரப்படுகின்றது.

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் இம் மன்றில் தோற்றாவிடில் உமக்கு சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படுவதற்கான முகவரியை கூறும் விப்ரக் குறிப்பொன்றை இந்நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விளக்கத் திகதியை நியமிப்பதற்காக பகிரங்க நீதிமன்றில் இவ்வழக்கு கூப்பிடப்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீர் பெற விரும்பினால் உமது பதிவு செய்யப்பட்ட முகவரியை இந்நீதிமன்றின் பதிவாளரிடம் கொடுக்கும்படியும் பதிவஞ்சல் மூலம் உமக்கு அதனை அறிவிப்பதற்காக ஏற்படும் அஞ்சல் செலவுக்கான முத்திரைகளையும் கொடுக்குமாறும் இத்தால் கு.ந.ச.கோ.யின் 80ம் பிரிவின் கீழ் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

வரைபு
பவானி சற்குணராசா
வழக்காளி சட்டத்தரணி

(466)

## உ.த.பரீட்சை முடிபு

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் (இணையத்தளம் மூலம் பெறப்பட்டவை).

*கலைப்பிரிவு*

க.கரிகரசுதன் 3ஏ, ச.மணிவர்ணன் 2ஏ பி, த.துஷ்யந்தி 2ஏ பி, த.நிறைஞ்சனா 2ஏ பி, கோ.கம்சதனி ஏ 2பி, ச.வசந்தன் ஏ 2பி, யோ.யர்மிளா ஏ பி சி, அ.கௌசி ஏ பி சி, த. ஜெயபிரதாப் ஏ பி சி, வி.கல்பனா ஏ பி எஸ், ஜெ.கஸ்தூரன் ஏ பி. எஸ், ஆ.றோமியா 3பி,

*வர்த்தகப்பிரிவு*

இ.சித்திரா 2பி சி, ந.நிமல்ராஜ் 2பி சி.

*கணிதப் பிரிவு*

ச.விஜயப்பிரகாஷ்பி 2சி. (ந-133)

## வடமராட்சி விவசாயிகளுக்கு ம.எண்ணெய் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி விவசாயிகளுக்கு பங்கீட்டு அட்டை மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

இதற்காக யாழ். அரசாங்க அதிபரினால் வாராந்தம் 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் வடமராட்சிப் பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத் திற்கு 3 ஆயிரம் லீற்றர், பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத்திற்கு 2 ஆயிரம் லீற்றர், புலோலி ப.நோ.கூ. சங்கத்திற்கு 6 ஆயிரம் லீற்றர், கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத்திற்கு 4 ஆயிரம் லீற்றரும் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றை வழங்கும் நடவடிக்கையில் புலோலி கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகஸ்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.

வடமராட்சியிலுள்ள விவசாயிகள் தமது கமக்கார அட்டைகளுடன் தொடர்பு கொண்டு எரிபொருள்களுக்கான பங்கீட்டு அட்டையை பெற்றுக் கொள்ளலாம் எனவும் வடமராட்சி யிலுள்ள உழவு இயந்திரங்களுக்கு டீசல்கள் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் எனவே அதிக கூலி கொடுத்து விவசாயிகள் ஏமாற வேண்டாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-35)

## மண்டைதீவில் பனை, தென்னை தறிப்பு

மண்டைதீவில் உள்ள கடற்படையினர் அங்குள்ள பனை மற்றும் தென்னை மரங்களைத் தறித்து அழிப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காவலரண்களைப் புதுப்பிப்பதற்காக கடற்படையினர் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கையால் மண்டைதீவில் உள்ள பனை, தென்னை வளங்கள் அழிக்கப்படுவதாக அப்பகுதிமக்கள்கவலை தெரிவிக்கின்றனர். (ந)

## பனை, தென்னை வள தொழில் வாய்ப்புக்குப் பதிவு

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பனை,தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புடைய பலர் தொழில்வாய்ப்புக்களை இழந்துள்ளதால் அவர்களுக்கான தொழில் வாய்ப்பினை ஏற் படுத்துவது பற்றி ஆராய்வதற்காக தொழில் இழந்தவர்களின் பதிவுகளை மேற்கொள்வதில் சங்கம் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது யாழ்.குடாநாட்டில் சங்கத்தின் 23 கிளைகள் உண்டென்றும் தொழில்வாய்ப்பினை இழந்தவர்கள் இக்கிளைகளில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (து-133)

ஒளி விளக்குகள் வைத்திருப்போர் மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக!

-பிளேட்டோ

வலம்புரி

# இழந்த கல்வியை ஈடுசெய்ய உதவுங்கள்

இதுகாறும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட யாழ். குடாநாட்டு மாணவர்கள் இன்றுமுதல் பாடசாலைக்குச் சென்று தமது கற்றல் செயற்பாட்டில் ஈடுபடவுள்ளனர்.

முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஐந்து வாரங்களுக்கு மேலாகப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீளவும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான களநிலையை அனைவரும் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும்.

அவர்கள் இழந்த கல்வியை ஈடுசெய்வதில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பணி தேவையானதாகும்.

குறிப்பாக ஏழை மாணவர்கள் கல்வி கற்கும் பின்தங்கிய பாடசாலைகளில் இழந்த கல்வியை மீட்டெடுக்கும் பணி முன்னெடுக்கப்பட வேண்டும்.

பாடசாலைக்குச் செல்லாத நாட்களில் இழந்துபோன கல்வியை ஈடுசெய்யுங்கள் என்ற கோரிக்கையை பிரபல்யமான பாடசாலைகளில் கேட்க வேண்டிய தேவையில்லை.

அவர்கள் தமது பாடசாலை பிள்ளைகளின் தேவைப்பாட்டை உணர்ந்து அதற்கேற்றவாறு தமது கல்வி முகாமைத்துவத்தை அமைத்துக் கொள்வார்கள்.

இதற்கு அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பெரும்பாலான மாணவர்களின் பொருளாதார வசதிபடைத்த பெற்றோர்களும் கல்விப்புலன் மிக்க பெற்றோர்களும் ஒத்தாசையாகவிருப்பார்கள்.

ஆனால் பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் நிலைப்பாடே பரிதாபத்துக்குரியதாகும்.

'ஏழை மாணவர்கள் படித்து என்ன செய்யப் போகிறார்கள்?' 'இவர்களுக்குப் படிப்பித்துத்தான் என்ன பயன்?' என்ற சிந்தனைகள் எல்லா ஆசிரியரிடத்தும் இல்லாவிடினும் அநேகமான ஆசிரியர்களிடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய சிந்தனையோடு பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு விடயத்தை தமது ஆழ்மனத்தில் நிரந்தரமாகப் பதிந்து கொள்ள வேண்டும்.

அதாவது 'குரு' 'ஆசிரியர்' 'ஆசான்' என்ற உயர் பதங்கள் இன்றுவரை பேணப்படுகின்றதெனில் அதற்குக் காரணம் கிராமப்புறத்துப் பாடசாலைகள் என்பது கல்வியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

பின்தங்கிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு முழுமையான மதிப்பைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். தமது கண்கண்ட தெய்வமாக அவர்கள் ஆசிரியர்களைப் போற்றுகின்றார்கள்.

இந்த உயரிய சிறப்பை பிரபல்யமான பாடசாலைகளில் எதிர்பார்க்க முடியாது என்பது ஆய்வுகளின் முடிபு.

தனியார் கல்வி நிலையங்களிலும் தனிப்பட்ட முறையிலும் கல்வி கற்கும் வசதி படைத்த மாணவர்கள் ஆசிரியர்களை மதிப்பது மிகக் குறைவு என்ற உண்மையை கல்வி ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

எனவே ஆசிரியத்துவம் மதிக்கப்பட வேண்டும் என ஆசிரியர்கள் எவரேனும்நினைப்பார்களாயின் அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவை வறிய மாணவர்களை நோக்கியதாகவிருக்க வேண்டும்.

அவ்வகையில் கடந்த ஐந்து வாரங்களாக பாடசாலைப் பகிஷ்கரிப்புக் காரணமாக இழந்துபோன கல்வியை ஏழை மாணவர்கள் மீட்டெடுக்க ஆசிரியத் தெய்வங்கள் கருணை செய்ய வேண்டும்.

இதற்கு ஒவ்வொரு வலயங்களும் பொருத்தமான திட்டங்களைத் தீட்டவேண்டும். அரசின் கல்வித் திட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவ தை விடுத்து வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்கு எழுத்தறிவியுங்கள்.

எழுதத் தெரியாத மாணவர்களுக்கு எழுதக் கற்றுக் கொடுங்கள். இவை அடிப்படையானவை. அடிப்படைகள் உரமான உள்ளீடுகளாயின் வெளியீடுகள் உறுதியானவையாகவிருக்கம் என்பதை இவ்விடத்தில் ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஏழை மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து விட்டால் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தமக்குக் கற்பித்த ஆசிரியர்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுவார்கள்.

ஏழை மாணவர்கள்-பின்தங்கிய பாடசாலைகள் என்பதற்காக அவர்களுக்கான கல்வி வழங்கலை குறைப்புச் செய்து விடாதீர்கள். இது ஆசிரியர்களிடம் விடுக்கும் தாழ்மையான வேண்டுதல்.

# வடக்குக் கிழக்குப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்குத் தடை

## மாகாணக் கல்வி அமைச்சு கண்டிப்பான உத்தரவு

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் எந்தப் பாடசாலைகளிலும் தொண்டர் ஆசிரியர்களை நியமனம் செய்யவேண்டாம் என மாகாணக் கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

வடக்குக் கிழக்கு ஆளுநரின் கடுமையான அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

இந்த அறிவித்தல்களை பின்பற்றாத அதிபர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது கடமையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்த ஆசிரியர் நியமனங்களை வழங்குவதில் பல சிக்கல்கள் எதிர்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு தேவையான அடிப்படைக் கல்வித் தகைமை கொண்டிருக்காததால் இச் சிக்கல் எழுந்துள்ளதாகவும் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர், எனினும் ஏற்கனவே சேவையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களின் நன்மை கருதி அவர்களை ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வதற்கு மத்திய கல்விமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் தெரிவித்தார். (ந-5)

# வட பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அரசு தயாராகிறது-த.தே.கூட்டமைப்பு


இராணுவம் வட பகுதியில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பாரிய படை நடவடிக்கையை சர்வதேச சமூகம் தடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டு கோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை.சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில்;

பிரசல்ஸில் கடந்த செப்ரெம்பர் 12 ஆம்திகதி நடைபெற்ற இணைத் தலைமை நாடுகள் கூட்டத்துக்குப் பின்னர் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஒஸ்லோவில் ஒக்டோபரில் நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாராகவிருப்பதாகவும் அனைத்து வன்முறைகளையும் இருதரப்பினரும் கைவிட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டது முதல் விடுதலைப் புலிகள் சாதகமான இணக்கப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர்.

பேச்சுகளுக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான அனைத்து வன்முறைகளையும் கைவிட்டுள்ளனர். ஆகையால் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் அரசாங்கம் கைவிட்டுவிட்டு பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்



கான ஏதுவான சூழ்நிலையையும் உருவாக்க சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

## இணைத் தலைமை நாடுகளின் தூதர்கள் ஜனாதிபதி மகிந்தவுடன் இன்று சந்திப்பு

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஒக்டோபர் 28இல் நடைபெறவுள்ள பேச்சுக்களை முன்னிட்டு அனைத்துப் போர் நடவடிக்கைகளையும் இரு தரப்பும் கைவிட வேண்டும் என்று இச் சந்திப்பில் வலியுறுத்தப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை இராணுவத் தளபதி பொன்சேகாவை இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் சந்தித்துப் பேசினர்.

இதில் இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கைகளை தொடரும் என்று தெரிவித்ததையடுத்துஅமெரிக்கா, நோர்வே, யப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜேர்மனி ஆகியவற்றின் தூதுவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதென முடிபு செய்துள்ளனர்.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கான நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரை இத் தூதுவர்கள் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## சர்வதேச ஊடகவியலாளர் குழு இன்று இலங்கை வருகை

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு தொடரும் அச்சுறுத்தல் குறித்து விசாரணை நடத்த சர்வதேச ஊடகவியலாளர்கள் அமை ப்புக்களின் பிரதிநிதிகள் இன்று திங்கட்கிழமை கொழும்பு வருகை தரவுள்ளனர்.

சர்வதேச ஊடக ஆதரவு இயக்கம், சர்வதேச ஊடக நிறுவனம், சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு. ஐ.நாவின் யுனெஸ்கோ, சர்வதேச செய்தி பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றின் 5 பிரதிநிதிகள் கொண்ட குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளன.

ஊடகவியலாளர்கள் படுகொலைகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் தணிக்கைமுறை ஆகியவை குறித்து இக் குழுவினர் ஆராயவுள்ளனர். (ந-5)

# பரிசு பெறும் நூல்களின் விபரம் மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியீடு

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கில் மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் வழங்கப்படும் எழுத்தாக்க நூல்களுக்கான பரிசு பெறுவோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு;

### 2004 பரிசில் பெறும் நூல்கள்

☆ *கவிதை*; 'ஓவியம் வரையாத தூரிகை' – ஜனபா இஸ்ஸத் ரிஹானா(அனார்). 'கைகளுக்குள் சிக்காத காற்று' – ஜெயசீலன்.

☆ *சிறுகதை* 'எங்கே மனக்கண்ணையும் திறவுங்கள்' – ஆதித்தநிலா.

☆ *நாவல்*– 'வெள்ளாவி' – விமல்குழந்தைவேல்.

☆ *நாடகம்*– 'இமயம்' அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

☆ *பல்துறை*– 'பஞ்சமரும் சமூகத் தொடரும்' – அருட்திரு. பென்ஜமின் ஜெயராசா. 'ஆழியவளை' –கந்தசாமி முத்துராசா. 'தமிழ் எழுத்தின்தோற்றம்' –கலாநிதி ப.புஸ்பரத்தினம். 'ஈழத்துக் கலைத்துறைப் பதிவுகள்' எஸ். சிவானந்தராசா.

☆ *உயர் கல்வி*– 'ஆசிரிய முகாமைத்துவம்' –மா.சின்னத்தம்பி. 'முகாமைத்துவத்துக்கான தகவல் தொழில் நுட்பம்' –வே.ஈஸ்வரன்.

☆ *இலக்கிய ஆய்வும் விமர்சனமும்*– 'டானியலின் எழுத்துக்கள்' –கலாநிதி செ.திருநாவுக்கரசு. 'ஈழத்தமிழ் நாவல்களின் சமூதாயச் சிக்கல்கள்' –கலாநிதி ம.இரகுநாதன்.

☆ *சிறுவர் இலக்கியம்*– 'மாவீரன் புள்ளிமான்' –ஓ.கே. குணநாதன்.

### 2005 இல் பரிசில் பெறும் நூல்கள்

☆ *சிறுவர் இலக்கியம்*– 'வாழநினைத்தால் வாழலாம்' – சோ.ராமேஸ்வரன்.

☆ *கவிதை*– 'நினைவுச் சுவடுகள்' –சோ.பத்மநாதன் 'தனித்துத் திரிதல்' –த.மலர்ச்செல்வன்.

☆ *உயர் கல்வி*– 'இலங்கையின் முகாமைத்துவக் கல்வி' –மா.சின்னத்தம்பி.

☆ –*பல்துறை*– 'மட்டக்களப்பு வரலாறு' –வெல்லவூர்க் கோபால். 'இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்' – ஐ.சாந்தன். 'செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம்' – அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

☆ *இலக்கிய ஆய்வும் விமர்சனமும்*– 'சீர் சமைத்த சிற்பி' அருட் திரு.சி.ஜே.அன்ரனிபாலா.

☆ *நாடகம்*– 'நிலாவணன் கவிதை நாடகம்' –நிலாவணன். 'அயோத்தி மன்னன்' –ஓ.கணபதிப்பிள்ளை.

☆ *சிறுகதை*– 'அகதி அரிசி' –தையிட்டி அ.இராசதுரை

☆ *நாவல்*– 'பெரியமரைக்கார் சின்னமரைக்கார்' – ஜனைதா ஷெரீப். (ந)

# பயங்கரவாதத்தை ஒழிக்க இராணுவ நடவடிக்கை தேவை

## இந்து நாளிதழுக்கு பேராசிரியர் பீரிஸ் செவ்வி



(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிக்க இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தியா சென்றுள்ள அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்து நாளிதழுக்கு அளித்த செவ்வியிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுவதன் ஊடாக இலங்கையின் இனப் பிரச்சினையை அவதானமான முறையில் தீர்க்கமுடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழிக்க இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென தற்சமயம் இலங்கை மக்கள் விரும்புகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சியும் அதே கருத்தையே கொண்டுள்ளது.

எப்படி இருந்த போதிலும் சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அரசியல் மட்டத்திலேயே தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ந-5)

# விடுதலைப்புலிகள் மீட்ட 11 படையினரின் சடலங்கள் இராணுவத்திடம் ஒப்படைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட படையினரின் 11சடலங்களும் நேற்று இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த 11 சடல்ங்களும் மாங்கேணி கஜவத்தைப் பகுதியில் வைத்து இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் டேவிட் விக்னாட்டே தெரிவித்தார்.

மாங்கேணியில் (04 ஆம் பக்கம் பார்க்க) இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நடந்த மோதலில் இராணுவ வீரர் ஒருவர் காணா மல் போயுள்ளார். மீட்டுத்தருமாறு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிட மும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு வினரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை மாங்கேணி மோதலில் உயிரிழந்ததாகக் கருதப்படும் 12 பேரின் சடலங்கள் நேற்று முன்தினம் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றில் ஒரு சடலம் மாத்திரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் ஏனைய 11 பேரின் சடலங்கள் அரசின் செலவில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் வாழைச்சேனை வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ந-5)

# யப்பானிய விசேட தூதுவர் அகாசி இலங்கை வருகிறார்



(கொழும்பு)

இலங்கைக்கான யப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரும் இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பலரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

கொழும்பில் சந்திப்புக்களை மேற்கொள்ளும் அகாசி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் இலங்கைக்கு அகாசி வருகை தந்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க முயன்றபோதும் சந்திப்பு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த 17 ஆயிரத்து 630 மாணவருக்கு இம்முறை பல்கலைக்கழக அனுமதி

(கொழும்பு)

2006 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 17 ஆயிரத்து 630 பேருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப் படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் அமைதியான சூழ்நிலை நிலவுமாயின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் மானியங்கள் ஆணைக்குழுவின் தல்லவர் பேராசிரியர் காமினி சமணநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பல்கலைக்கழக அனுமதிக்கென நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 995 பேர் மேலதிகமாக அனுமதிக்கப் பட்டதால் இம்முறை மேலதிகமான மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் கடந்த காலங்களில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப் படுவதற்கு வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக் கழகங்களில் நிலவிய சிக்கல்களும் காரணம் என ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

சிங்கள ,மற்றும் முஸ்லிம் மாணவர்கள் வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதில் கூடுதல் ஆர்வம் காட்டுவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் வெளியான க.பொ.த.உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவது தொடர்பான கைநூல் இன்று முதல் வடக்கு கிழக்கு உட்பட்ட அனைத்து மாகாணங்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

டிசம்பர் மாத இறுதியில் அல்லது ஜனவரி மாத முற்பகுதியில் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

இதன்படி 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதம் பல்கலைக்கழகத்திற்கு புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். (ந-5)

# சமஷ்டி யோசனை முன்வைத்தால் ஹெல உறுமய எதிர்க்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியும், சுதந்திரகட்சியும் இணைந்து இனப்பிரச்சினைத்தீர்வுக்கு சமஷ்டி யோசனைகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்குமாயின் ஹெல உறுமய அதனை கடுமையாக எதிர்க்கும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த சிந்தனையை மறந்து விட்டு சமஷ்டி அடிப்படையிலான பழையகால பீரிஸ் சிந்தனையை அரசாங்கம் முன்னெடுக்க முயலக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க-ஸ்ரீ. சு.கட்சி உடன்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், ஐ.தே.கவும் சுதந்திரக்கட்சியும் இணைந்து செயற்பட உடன்பாடு கண்டிருப்பது குறித்து எமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை.

ஆனால் எந்தக் கொள்கையின் அடிப்படையில் அவர்கள் இணைந்திருக்கிறார்கள் என்பது பற்றி எமக்கு தெரியாது என்று குறிப்பிட்டார். (ந-5)

# முகமாலையில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது தாக்குதல்

## புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

முகமாலையில் இருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் தமது முன்னரங்கப் பகுதிக்கு முன்னேற முயன்ற இராணுவத்தின் சிறு குழுவொன்றுடன் மோதல் இடம் பெற்றதாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இம் மோதலின் போது இராணுவத்தினர் பின்வாங்கியதுடன் அவர்கள் தரப்பில் ஐந்து படையினர் கொல்லப்பட்டதாகவும் மூன்று ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

# மகிந்த -ரணில் புதன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை முக்கிய சந்திப்பொன்று அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் செயற்படுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா சுதந்திரகட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு பொது இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து இவ்விரு கட்சித் தலைவர்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (ந-5)

# புலிகளின் பதிலுக்காக...

வெள்ளிக்கிழமை அர சாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவித்தி ருந்தது.

விடுதலைப்புலிகளும் இம்மாதம் இறுதியில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுக்களை நடத்தத் தயாரென அறிவித்திருந்தனர்.

ஆனாலும் பேச்சுவார்த்தை உரிய தினத்தில் நடைபெறுமா ? என்பதில் நிச்சயமற்ற தன்மை தற்போது காணப்படுகின்றது.

வடக்குக்கிழக்கில் திடீரென வெடித்த மோதல்களே இதற்கான காரணமாகும் என்று கூறிய அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன மேலும் கூறுகையில்;

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து விடுதலைப்புலிகளிடம் இருந்து இதுவரை உத்தியோகபூர்வமான பதில் கிடைக்க வில்லை.

அரசாங்கம் விடுதலைப்புலிகளின் பதிலுக்காகக் காத்திருக்கின்றது. அவர்களின் பதிலிலேயே அனைத்து விடயங்களும் தங்கியுள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கம் தனது பதிலை நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஊடாக் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந் நிலையில் விடுதலைப்புலிகளின் உத்தியோக பூர்வமான பதில் அரசாங்கத்திற்கு இன்னமும் கிடைக்கவில்லை. இதே நேரம் கிழக்கு மாகாணத்தில் தாக்குதல் நடவடிக்கைகள் இடம் பெறுவதாக அறிகின்றோம்.

இத் தாக்குதல் நடவடிக்கைகள் எதிர்கால சமாதான நடவடிக்கைகளை பாதிக்குமாவென தற்போது கூற முடியாது என்றும் அவர் கூறினார். (ந-5,10)

# திருநெல்வேலியில்...

வத்தினர் ஒரு தொகை ஆயுதங்களை நேற்று முன்தினம் மீட்டுள்ள தாகவும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடகமத்திய நிலை யம் தெரிவித்துள்ளது. (ந-5)

# ஆயுதத்தை ஒப்படைத்தாலே...

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடந்த விஷேட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஏ-9 வீதியைத் திறப்பதன் மூலம் வடக்குக் கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா ? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தரையிலமர்ந்து சத்தியாக்கிரகம் செய்த போதிலும் ஏ-9 வீதி திறக்கப்படமாட்டாது.

நிதி சேகரிக்கவும் வரி அறவிடவுமே ஏ-9 வீதி திறக்கப்படவேண்டுமென தமிழீழ விடுதலைப்புலிகள் கோரிவருவதுடன் இதற்கு ஆதரவாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சத்தியாக்கிரகம் செய்து வருவதாகவும் பிரதியமைச்சர் டபிள்யூ.பி.எக்கநாயக்கா குறிப்பிட்டுள்ளார். (10)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.